# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2021.04.28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## நிதி முகாமைத்துவ (பொறுப்பு)
## (திருத்தம்)

***2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு)***
***சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2*** : *இவ்வாசகம், 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3 ஆம் பிரிவை, அதன் (உ) மற்றும் (ஊ) என்னும் பந்திகளைத் திருத்துவதன் மூலம், திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது -*

*(அ) பந்தி (உ) இல் குறித்துரைக்கப்பட்ட உத்தரவாத வரையறையை 15 சதவீதம் வரை அதிகரிப்பதன் மூலமும்; அத்துடன்*

*(ஆ) முழுமொத்த உள்நாட்டு உற்பத்தி இலக்குக்கு, நிலைநாட்டப்பட்ட தனிசை 2030 ஆம் ஆண்டுக்கு மாற்றுவதன் மூலமும்,*

*பொறுப்புள்ள நிதி முகாமைத்துவத்திற்கு அடிப்படையாகவுள்ள குறிக்கோள்களை மீளாய்வு செய்வதற்காகும்.*

## நிதி முகாமைத்துவ (பொறுப்பு)
## (திருத்தம்)

ச.வ.- ஒ. 7/2021

### 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்       ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 2021, சனவரி 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருப்படுதலும் வேண்டும்.

*2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில், “பத்து சதவீதத்தை” என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘பதினைந்து சதவீதத்தை’’ என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், “2020, சனவரி 1 ஆம்” என்னும் எண்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக, ‘‘2030, சனவரி 1 ஆம்’’ என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன் மூலமும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.